முதல் தந்திரம்

1. உபதேசம்

113 விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
வுண்ணின் றுருக்கியொ ரொப்பிலா வானந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே. 1

114 களிம்பறுத் தானெங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தானருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே. 2

115 பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம னாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே. 3

116 வேயி னெழுங்கனல் போலேயிம் மெனியுங்
கோயி லிருந்து குடிகொண்ட கோனந்தி
தாயினு மும்மல மாற்றித் தயாவென்னுந்
தோயம தாயெழுஞ் சூரிய னாமே. 4

117 சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ்சூழ் பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோ
லாரியன் றோற்றமு னற்றம லங்களே. 5

118 மலங்களைந் தாமென மாற்றி யருளித்
தலங்களைந் தானற் சதாசிவ மான
புலங்களைந் தானப் பொதுவினு ணந்தியே
நலங்களைந் தானுண் ணயந்தா னறிந்தே. 6

www.aakikceyogam.com

119 அறிவைம் புலனுட னேநான்ற தாகி
நெறியறி யாதுற்ற நீராழம் போல
வறிவறி வுள்ளே யழிந்தது போல
குறியறி விப்பான் குருபர னாமே. 7

120 ஆமேவு பானீர் பிரிக்கின்ற வன்னம்போற்
றமே தனிமன்றிற் றன்னந் தனிநித்தந்
தீமேவு பல்கர ணங்களு ளுற்றன
தாமே பிறப்பெரி சேர்ந்த வித்தாமே. 8

121 வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற்று
வொத்துப் புலனுயி ரொன்ற யுடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யர்களே. 9

122 சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துட்புக்குத் தன்னொளி தாய
தவயோகஞ் சாராத வன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே. 10

123 அளித்தா னுலகெங்குந் தானுன வுண்மை
யளித்தா னமர ரறியா வுலக
மளித்தான் றிருமன்று ளாடுந் திருத்தா
ளளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே. 11

124 வெளியின் வெளிபோய் விரவிய வாறு
மொளியி னொளிபோ யொடுங்கிய வாறு
மளியி னளிபோ யடங்கிய வாறுந்
தெளியு மவரே சிவசித்தர் தாமே. 12

125 சித்தர் சிவலோக மிங்கே தெரிசித்தோர்
சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முட்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர் தமுத்தி முதன்முப்பத் தாறே. 13

www.aakikceyogam.com

126 முப்பது மாறும் படிமுத்தி யேணியா
யோப்பிலா வானந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப வரிய சிவங்கண்டு தான்றெளிந்
தப்பரி சாக வமர்ந்திருந் தாரே. 14

127 இருந்தார் சிவமாகி யெங்குந் தாமாகி
யிருந்தார் சிவன்செய லியாவையு நோக்கி
யிருந்தார்முக் காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தா ரிழவுவந் தெய்திய சோம்பே. 15

128 சோம்ப ரிருப்பது சுத்தவெ ளியிலே
சோம்பர் கிடப்பது சுத்தவெ ளியிலே
சோம்ப ருணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கட் டூக்கமே. 16

129 தூங்கிக்கண் டார்சிவ லோகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே. 17

130 எவ்வாறு காண்பா னறிவு தனக்கெல்லை
யவ்வா றருட்செய்வ ளுதியரன் றனு
மொவ்வாத மன்று ளுமைகாண வாடுஞ்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம். 18

131 மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமா
யாணிப்பொன் மன்றினு ளாடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதவர் பேறுபெற் றாரே. 19

132 பெற்றா ருலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றா ருலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றாரம் மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றா ருலகுடன் பேசாப் பெருமையே. 20

www.aakikceyogam.com

133 பெருமை சிறுமை யறிந்தெம் பிரான்போ
லருமை யெளிமை யறிந்தறி வாரா
ரொருமை யுளாமைபோ லுள்ளைந் தடக்கி
யிருமையுங் கேட்டிருந் தார்புரை யற்றே. 21

134 புரையற்ற பாலினு ணெய்கலந் தாற்போற்
றிரையற்ற சிந்தையுள் ளாரிய னென்செப்பு
முரையற் றுணர்வோ ருடம்பிங் கொழிந்தாற்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே. 22

135 சத்த முதலைந்துத் தன்வழித் தான்சாரிற்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரு
மத்த மிதுகுறித் தாண்டுகொ ளப்பிலே. 23

136 அப்பினிற் கூர்மை யாதித்தன் வெம்மையா
லுப்பெனப் பேர்பெற் றுருச்செய்த தவ்வுரு
வப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற்
செப்பினிச் சீவன் சிவத்து ளடங்குமே. 24

137 அடங்கு பேரண்டத் தணுவண்டஞ் சென்றங்
கிடங்கொண்ட தில்லை யிதுவன்றி வேறுண்டோ
கடந்தொறு நின்ற வுயிர்கரை காணிற்
றிடம்பெற நின்றான் றிருவடி தானே. 25

138 திருவடி யேசிவ மாவது தேரிற்
றிருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கிற்
றிருவடி யேசெல் கதியது செப்பிற்
றிருவடியே தஞ்ச முட்டெளி வார்க்கே. 26

139 தெளிவு குருவின் றிருமேனி காண்ட
றெளிவு குருவின் றிருநாமஞ் செப்ப
றெளிவு குருவின் றிருவார்த்தை கேட்ட
றெளிவு குருவுருச் சிந்தித்த றானே. 27

www.aakikceyogam.com

140 தானே புலனைந்துந் தன்வச மாயிடுந்
தானே புலனைந்துந் தன்வசம் போயிடுந்
தானே புலனைந்துந் தன்னின் மடைமாறுந்
தானே தனித்தெம்பி ரான்றனைச் சந்தித்தே. 28

141 சந்திப்பது நந்தி தன்றிருத் தாளிணை
சிந்திப்பது நந்தி செய்ய திருமேனி
வந்திப்பது நந்தி நாமமென் வாய்மையாற்
புந்திக்கு ணிற்பது நந்திபொற் போதமே. 29

142 போதந் தருமெங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினர்
நாத னடத்தா னயனங் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந் தார்விண்ணே. 30

2. யாக்கை நிலையாமை

143 மண்ணொன்று கண்டீ ரிருவினைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது தீயினைச் சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணவபோ
லெண்ணின்றி மாந்த ரிறக்கின்ற வாறே. 1

144 பண்டம் பொய்க்கூரை பழகி விழுதலா
லுண்டவப் பெண்டிரு மக்களும் பின்செலார்
கொண்ட விரதமு ஞானமு மல்லது
மண்டி யவருடன் வழிநட வாதே. 2

145 ஊரெலாங் கூடி யொலிக்க வழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினின் மூழ்கி நினைப்பொழிந் தார்களே. 3

www.aakikceyogam.com

146 காலு மிரண்டு முகட்டல கொன்றுள
பாலுட் பருங்கழி முப்பத்தி ரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தபின்
போலுயிர் மீளப் புகவறி யாதே. 4

147 சீக்கை விளைந்தது செய்வினை மூட்டற்ற
வாக்கை பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைப் பலியிட்டுக் கைகொட்டு மாறே. 5

148 அடப்பண்ணி வைத்தா ரடிசிலை யுண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டா
ரிடப்பக்க மேயிறை நொந்ததே யென்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே. 6

149 மன்றத்தே நம்பிக்கு மாட மெடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினான்
மன்றத்தே நம்பிமுக் கோடி வழங்கினான்
சென்றத்தா வென்னத் திரிந்திலன் றானே. 7

150 வாசந்தி பேசி மணம்புணர்ந் தப்பதி
நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை
யாசந்தி மேல்வைத் தமைய வழுதிட்டுப்
பாசந்தி சுட்டுப் பலியட்டி னார்களே. 8

151 கைவிட்டு நாடிக் கருத்தழிந் தச்சற
நெய்யட்டிச் சோறுண்ணு மைவரும் போயினார்
மையிட்ட கண்ணாளு மாடு மிருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே. 9

152 பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
வொன்பது வாசலு மொக்க வடைத்தன
துன்புறு காலத் துரிசுவ ரமேன்மே
லன்புடை யார்க ளழுதகன் றார்களே. 10

153 நாட்டுக்கு நாயக னம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே. 11

154 முப்பது முப்பது முப்பத் தறுவருஞ்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபி
னொப்ப வனைவரு மோட்டெடுத் தாரே. 12

155 மதுவூர் குழலியு மாடு மனையு
மிதுவூ ரொழிய விமானம தேறிப்
பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி
யதுவூர் வாங்கியே வைத்தகன் றாரே. 13

156 வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்க
ளச்சக லாதென நாடு மரும்பொருள்
பிச்சது வாய்ப்பின் றொடர்வுறு மற்றவ
ரெச்சக லாநின் றிளைக்கின்ற வாறே. 14

157 ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரு மக்களு
மூர்த்துறைக் காலே யொழிவ ரொழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே. 15

158 வளத்திடை முற்றத்தோர் மானில முற்றுங்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந் தாலவை யோடென்று வைப்ப
ருடலுடைந் தாலிறைப் போதும் வையாரே. 16

159 ஐந்து தலைப்பறி யாறு சடையுள
சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப்
பந்தலு மொன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேலறி யோமே. 17

www.aakikceyogam.com

160 அத்திப் பழமு மறைக்கீரை நல்வித்துங்
கொத்தி யுலைப்பெய்து கூழிட்டு வைத்தன
ரத்திப் பழத்தை யறைக்கீரை வித்துண்ணக்
கத்தி யெடுத்தவர் காடுபுக் காரே. 18

161 மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை
காலு மிரண்டு முகட்டல கொன்றுண்டு
வோலையான் மேய்ந்தவா யூடு வரிதமை
வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளிகையே. 19

162 கூடங் கிடந்தது கோலங்க ளிங்கில்லை
யாடுமி லயமு மற்ற தறுதலும்
பாடுகின் றார்சிலர் பண்ணி லழுதிட்டுத்
தேடிய தீயினிற் றீயவைத் தார்களே. 20

163 முட்டை பிறந்தது முந்நூறு நாளினி
லிட்டது தானிலை யேதேனு மேழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற்
கெட்ட தெழுபதிற் கேட்டறி யீரே. 21

164 இடிஞ்சி லிருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சிரு ளாவ தறியா வுலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே. 22

165 மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த
வுடலு முயிரு முருவந் தொழாம
லிடர்படர்ந் தேழா நரகிற் கிடப்பர்
குடர்படர் வெந்தமர் கூப்பிடு மாறே. 23

166 குடையுங் குதிரையுங் கொற்றவா ளுங்கொண்
டிடையுமக் கால மிருந்து நடுவே
புடையு மனிதனுற் போகு மப்போதே
யடையு மிடம்வல மாருயி ராமே. 24

www.aakikceyogam.com

167 காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
றேற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போனவிக் கூட்டையே. 25

3. செல்வநிலையாமை

168 அருளு மரசரு மானையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னந்
தெருளு முயிரொடுஞ் செல்வனைச் சேரின்
மருளும் பினையவன் மாதவ மன்றே. 1

169 இயக்குறு திங்க ளிருட்பிழம் பொக்குந்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
பெயற்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே. 2

170 தன்னது சாயை தனக்குத வாதுகண்
டென்னது மாடென் றிருப்பர் களேழைக
ளுன்னுயிர் போமுட லொக்கப் பிறந்தது
கண்ணது காணொளி கண்டுகொ ளீரே. 3

171 ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமுங்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடு
மோட்டித் துரத்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்தவை கைவிட்ட வாறே. 4

172 தேற்றத் தெளிமின் றெளிந்தீர் கலங்கன்மி
னூற்றுப் பெருக்கிங் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறித்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் குறிக்கலு மாமே. 5

www.aakikceyogam.com

173 மகிழ்கின்ற செல்வமு மாடுமுடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போ
லவிழ்கின்ற வாக்கைக்கோர் வீடுபே றுகச்
சிமிழொன்றில் வைத்தமை தேர்ந்தறி யாரே. 6

174 வாழ்வு மனைவியு மக்க ளுடன்பிறந்
தாரு மளவே தமக்கென்ப ரொண்பொருண்
மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்
கூவுந் துணையொன்று கூறலு மாமே. 7

175 வேட்கை மிகுத்தது மெய்கொள்வா ரிங்கிலை
பூட்டுந் தறியொன்று போம்வழி யொன்பது
நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. 8

176 உடம்பொ டுயிரிடை விட்டோடும் போது
வடும்பரி சொன்றிலை யண்ணலை யெண்ணும்
விடும்பரி சாய்நின்ற மெய்ந்நமன் றூதர்
சுடும்பரி சத்தையுஞ் சூழகி லாரே. 9

4. இளமை நிலையாமை

177 கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே. 1

178 ஆண்டு பலவுங் கழிந்தன வப்பனைப்
பூண்டு கொண்டாரும் புகுந்தறி வாரிலை
நீண்டன காலங்க ணீண்டு கொடுக்கினுந்
தூண்டு விளக்கின் சுடரறி யாரே. 2

www.aakikceyogam.com

179 தேய்ந்தற் றொழிந்த விளமை கடைமுறை
யாய்ந்தற்ற பின்னை யரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
யோர்ந்துற்றுக் கொள்ளு முலாவுள்ள போதே. 3

180 விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போ
லரும்பொத்த மென்முலை யாயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயுமொத் தேனே. 4

181 பால னிளையன் விருத்த னெனநின்ற
காலங் கழிவன கண்டு மறிகிலார்
ஞாலங் கடந்தண்ட மூடறுத் தானடி
மேலுங் கிடந்து விரும்புவ ஞனே. 5

182 காலை யெழுந்தவர் நித்தலு நித்தலு
மாலை படுவதும் வாணுட் கழிவதுஞ்
சாலு மவ்வீசன் சலவிய ஞகிலு
மேல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே. 6

183 பருவூசி யைந்துமோர் பையினுள் வாழும்
பருவூசி யைந்து பறக்கும் விருகம்
பருவூசி யைந்தும் பனித்தலைப் பட்டாற்
பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே. 7

184 கண்ணனுங் காய்கதி ரோனு முலகினை
யுண்ணின் றளக்கின்ற தொன்று மறிகிலார்
விண்ணுறு வாரையும் வினையுறு வாரையு
மெண்ணுறு முப்பதி லீர்ந்தொழிந் தாரே. 8

185 ஒன்றிய வீரெண் கலையு முடன்றன
நின்றது கண்டு நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. 9

www.aakikceyogam.com

186 எய்திய நாளி லிளமை கழியாமை
யெய்திய நாளி லிசையினா லேத்துமி
னெய்திய நாளி லெறிவ தறியாம
லெய்திய நாளி லிருந்துகண் டேனே. 10

5. உயிர் நிலையாமை

187 தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பி
லிழைக்கின்ற தெல்லா மிறக்கின்ற கண்டும்
பிழைப்பின்றி யெம்பெரு மானடி யேத்தா
ரழைக்கின்ற போதறி யாரவர் தாமே. 1

188 ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்த
தைவரு மச்செய்யைக் காத்து வருவர்க
ளைவர்க்கு நாயக னோலை வருதலா
லைவரு மச்செய்யைக் காவல்விட் டாரே. 2

189 மத்தளி யொன்றுள தாள மிரண்டுள
வத்துள்ளே வாழு மரசனு மங்குள
னத்துள்ளே வாழு மரசன் புறப்பட்டான்
மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே. 3

190 வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கட மென்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாரே. 4

191 சென்றுணர் வான்றிசை பத்துந் திவாகர
னன்றுணர் வாலளக் கின்ற தறிகிலர்
நின்றுண ராரிந் நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே. 5

www.aakikceyogam.com

192 மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை
பீறு மதனைப் பெரிதுணர்ந் தாரிலை
கூறும் கருமயிர் வெண்மயி ராவது
மீறும் பிறப்புமொ ராண்டெனு நீரே. 6

193 துடுப்பிடு பானைக்கு மொன்றே யரிசி
யடுப்பிடு மூன்றிற்கு மஞ்செரி கொள்ளி
யடுத்தெரி யாமற் கொடுமின் னரிசி
விடுத்தன நாட்களு மேற்சென் றனவே. 7

194 இன்புறு வணடங் கினமலர் மேற்போ
யுண்பது வாச மதுபோ லுயிர்நிலை
யின்புற நாடி நினைக்கிலு மூன்றெளி
கண்புற நின்ற கருத்துணில் லானே. 8

195 ஆம்விதி நாடி யறஞ்செய்மி னந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமி
னும்விதி வேண்டு மதென்சொலின் மானிட
ராம்விதி பெற்ற வருமைவல் லார்க்கே. 9

196 அவ்வியம் பேசி யறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய ராகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொ டுண்மின் றலைப்பட்ட போதே. 10

6. கொல்லாமை

197 பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோ ரணுக்களைக் கொல்லாமை யொண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமு
முற்றரு மாவி யமர்ந்திட முச்சியே. 1

www.aakikceyogam.com

198 கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடிக் காரர் வலிக்கயிற் றுற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே. 2

7. புலான் மறுத்தல்

199 பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
யெல்லாருங் காண வியமன்றன் றூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே. 1

200 கொலையே களவுகட் காமம் பொய்கூறன்
மலைவான பாதக மாமவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையா மிவைஞான னந்தத் திருத்தலே. 2

8. பிறன்மனை நயவாமை

201 ஆத்த மனையா ளகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாம
லீச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. 1

202 திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
யருத்தமென் றெண்ணி யறையிற் புதைத்துப்
பொருத்தமி லாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே. 2

www.aakikceyogam.com

203 பொருள்கொண்ட கண்டனும் போதத்தை யாளு
மிருள்கொண்ட மின்வெளி கொண்டுநின் றேரு
மருள்கொண்ட மாதர் மயலுறு வார்கண்
மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே. 3

9. மகளிரிழிவு

204 இலைநல வாயினு மெட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா
முலைநலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே. 1

205 மனைபுகு வார்கண் மனைவியை நாடிற்
சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்குங்
கனவது போலக் கசிந்தெழு மன்பை
நனவது போலவு நாடவொண் ணுதே. 2

206 இயலுறும் வாழ்க்கை யிளம்பிடி மாதர்
புயலுறம் புல்லிற் புணர்ந்தவ ரேயினு
மயலுறும் வானவர் சார விருமென்பா
ரயலுறப் பேசி யகன்றெழிந் தாரே. 3

207 வையகத் தேமட வாரொடுங் கூடியென்
மெய்யகத் தோருளம் வைத்த விதியது
கையகத் தேகரும் பாலையின் சாறுகொண்
மெய்யகத் தேபெறு வேம்பது வாமே. 4

208 கோழை யொழுக்கங் குளமூடு பாசியி
லாழ நடுவா ரளப்புறு வார்களைத்
தாழத் தொடக்கித் தடுக்ககில் லாவிடிற்
பூழை நுழைந்தவர் போகின்ற வாறே. 5

www.aakikceyogam.com

10. நல்குரவு

209 புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
யடையப்பட் டார்களு மன்பில ரானுர்
கொடையில்லை கேளில்லை கொண்டா நட்பில்லை
நடையில்லை நாட்டி லியங்குகின் றூர்கட்கே. 1

210 பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென்
றக்குழி தூர்க்கு மரும்பண்டந் தேடுவீ
ரேக்குழி தூர்த்து மிறைவனை யேத்துமி
னக்குழி தூரு மழுக்கற்ற போதே. 2

211 கற்குழி தூரக் கனகமுந் தேடுவ
ரக்குழி தூர்க்கை யாவர்க்கு மரிய
தக்குழி தூர்க்கு மறிவை யறிந்தபி
னக்குழி தூரு மழுக்கற்ற வாறே. 3

212 தொடர்ந்தெழுஞ் சுற்றம் வினையிலுந் தீய
கடந்ததோ ராவி கழிவதன் முன்னே
யுடந்தொரு காலத் துணர்விளக் கேற்றித்
தொடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே. 4

213 அறுத்தன வாறினு மானின மேவி
யறுத்தன ரைவரு மெண்ணிலி துன்ப
மொறுத்தன வல்வினை யொன்றல்ல வாழ்வை
வெறுத்தன னீசனை வேண்டிநின் றனே. 5

11. அக்கினி காரியம்

214 வசையில் விழுப்பொருள் வானு நிலனுந்
திசையுந் திசைபெறு தேவர்கு ழாமும்
விசையம் பெருகிய வேத முதலா
மசைவிலா வந்தண ராகுதி வேட்கிலே. 1

www.aakikceyogam.com

215 ஆகுதி வேட்கு மருமறை யந்தணர்
போகதி நாடிப் புறங்குடித் துண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமறி வாலே தலைப்பட்ட வாறே. 2

216 அணைதுணை யந்தண ரங்கி யுளங்கி
யணைதுணை வைத்ததி னுட்பொரு ளான
விணைதுணை யாமத் தியங்கும் பொழுது
துணையணை யாயதோர் தூய்நெறி யாமே. 3

217 போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் டாகி மகிழ்ந்துட னேநிற்குந்
தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள்
வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறே. 4

218 நெய்நின் றெரியு நெடுஞ்சுட ரேசென்று
மைநின் றெரியும் வகையறி வார்கட்கு
மைநின் றவிழ்தரு மத்தின மாமென்றுஞ்
செய்நின்ற செல்வ மதியது வாமே. 5

219 பாழி யகலு மெரியுந் திரிபோலிட்
டூழி யகலு முறுவினை நோய்பல
வாழிசெய் தங்கி யுதிக்க வவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு மாமே. 6

220 பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த
வருஞ்செல்வந் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணிப்
பருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றாரே. 7

221 ஒண்சுட ரானை யுலப்பிலி நாதனை
யொண் சுடராகியென் னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோனுல கேழுங் கடந்தவத்
தண்சுட ரோமத் தலைவனு மாமே. 8

www.aakikceyogam.com

222 ஓமத்து ளங்கியி னுள்ளுள னெம்மிறை
யீமத்து ளங்கி யிரதங்கொள் வானுளன்
வேமத்து ளங்கி விளைவு வினைக்கடற்
கோமத்து ளங்கி குரைகட றனே. 9

223 அங்கி நிறுத்து மருந்தவ ராரணத்
தங்கி யிருக்கும் வகையருள் செய்தவ
ரெங்கு நிறுத்தி யிளைப்பப் பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழது வாமே. 10

12. அந்தணரொழுக்கம்

224 அந்தண ராவோ ரறுதொழிற் பூண்டுளோர்
செந்தழ லோம்பிமுப் போது நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றுங்கிட்டுச்
சந்தியு மோதிச் சடங்கறுப் போர்களே. 1

225 வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப்
போதாந்த மான பிரணவத் துட்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
யீதாமெ னாதுகண் டின்புறு வோர்களே. 2

226 காயத்தி ரியே கருதுசா வித்திரி
யாய்தற் குவப்பர் மந்திர மாங்குன்னி
நேயத்தே ரேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துட் டோயா மறையோர்க டாமே. 3

227 பெருநெறி யான பிரணவ மோர்ந்து
குருநெறி யாலுரை கூடினால் வேதத்
திருநெறி யான திருகை யிருத்திச்
சொருபம தானோர் துகளில்பார்ப் பாரே. 4

www.aakikceyogam.com

228 சத்திய முந்தவந் தானவ ளுதலு
மெய்த்தகு மிந்திய மீட்டியே வாட்டலு
மொத்த வுயிருட லுண்டா யுணர்வுற்றுப்
பெத்த மறுத்தலு மாகும் பிரமமே. 5

229 வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை யொழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை யொழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே. 6

230 நூலுஞ் சிகையு நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமா
நூலது வேதாந்த நுண்சிகை ஞானமா
நூலுடை யந்தணர் காணம் நுவலிலே. 7

231 சத்திய மின்றித் தனிஞானந் தானின்றி
யொத்த விடயம்விட் டோரு முணர்வின்றிப்
பத்தியு மின்றிப் பரனுண்மை யின்றியூண்
பித்தேறு மூடர் பிராமணர் தாமன்றே. 8

232 திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணுந்
துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே. 9

233 மறையோ ரவரே மறையவ ரானுன்
மறையோர்தம் வேதாந்த வாய்மையிற் றூய்மை
குறையோர்தன் மற்றுள்ள கோலா கலமென்
றறிவோர் மறைதெரிந் தந்தண ராமே. 10

234 அந்தண்மை பூண்ட வருமறை யந்தத்துச்
சிந்தைசெ யந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துத லில்லை நரபதி நன்றுகு
மந்தியுஞ் சந்தியு மாகுதி பண்ணுமே. 11

www.aakikceyogam.com

235 வேதாந்த ஞானம் விளங்க விதியிலோர்
நாதாந்த போத நணுகிய போக்கது
போதாந்த மாம்பரன் பாற்புகப் புக்கதா
ஞதாந்த முத்தியுஞ் சித்தியு நண்ணுமே. 12

236 ஒன்று மிரண்டு மொடுங்கிய காலத்து
நன்று மிருந்து நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்குந் திருவுடை யோரே. 13

237 தானே விடும்பற் றிரண்டுந் தரித்திட
நானே விடப்படு மேதொன்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணிய போகனு
யோமேவு மோமாகு தியவி யுண்ணவே. 14

13. அரசாட்சி முறை

238 கல்லா வரசனுங் காலனு நேரொப்பர்
கல்லா வரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா வரச னறமோரான் கொல்லென்பா
னல்லாரைக் கால னணுகிநில் லானே. 1

239 நாடோறு மன்னவ னாட்டிற் றவநெறி
நாடோறு நாடி யவனெறி நாடானே
னாடோறு நாடுகே டும்மூட னண்ணுமா
னாடோறுஞ் செல்வ நரபதி குன்றுமே. 2

240 வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடமெய் வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாகுமே. 3

www.aakikceyogam.com

241 மூடங் கெடாதோர் சிகைநூன் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனு
மீடொன் றிலனாகு மாதலாற் பேர்த்துணர்ந்
தாடம் பரநூற் சிகையறுத் தானன்றே. 4

242 ஞானமி லாதார் சடைசிகை நூனண்ணி
ஞானிகள் போல நடிக்கின்ற வர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞான முண்டாக்குத னலமாகு நாட்டிற்கே. 5

243 ஆவையும் பாரையு மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேன்
மேவு மறுமைக்கு மீளா நரகமே. 6

244 திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்
மறந்து மறநெறி யேயாற்றல் வேண்டுஞ்
சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையு
மறைந்திடில் வேந்தனுக் காறிலொன் றுமே. 7

245 வேந்த னுலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்க ளவ்வழி யாநிற்பர்
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே. 8

246 கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி யுண்ணுதோர்
மால்கொண்டு தேறலை யுண்ணு மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே. 9

247 தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
யத்தன் சிவன்சொன்ன வாகம நூனெறி
யெத்தண்ட முஞ்செயு மம்மையி லிம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே. 10

14. வானச் சிறப்பு

248 அமுதூறு மாமழை நீரத னாலே
யமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
யமுதூறுங் காஞ்சிரை யாங்கது வாமே. 1

249 வரையிடை நின்றிழி வானீ ரருவி
யுரையில்லை யுள்ளத் தகத்துநின் றூறு
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரையில்லை யெந்தைக் கழுமணி யாறே. 2

15. தானச் சிறப்பு

250 ஆர்க்கு மிடுமி னவரிவ ரென்னன்மின்
பாத்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை யுண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம றிமினே. 1

16. அறஞ்செய்வான்றிறம்

251 தாமறி வாரண்ண ருள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றரவர்
தாமறி வார்சில தத்துவ ராவர்க
டாமறி வார்க்குத் தமர்பர னாமே. 1

252 யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. 2

253 அற்றுநின் றாருண்ணு மூணே யறனென்னுங்
கற்றன போதங் கமழ்பவர் மானிட
ருற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண்ணும் பயனறி யாரே. 3

254 அழுக்கினை யோட்டி யறிவை நிறையீர்
தழுக்கிய நாளிற் றருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து
விழிக்கவன் றென்செய்வீ ரேழைநெஞ் சீரே. 4

255 தன்னை யறியாது தானல்லா ரென்னுதிங்
கின்மை யறியா திளையரென் றோராது
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னத்
தன்மையு நல்ல தவஞ்செய்யு நீரே. 5

256 துறந்தான் வழிமுதற் சுற்றமு மில்லை
யிறந்தான் வழிமுத லின்பமு மில்லை
மறந்தான் வழிமுதல் வந்தில னீச
னறந்தா னறியு மளவறி வாரே. 6

257 தான்றவஞ் செய்வதாஞ் செய்தவத் தவ்வழி
மான்றெய்வ மாக மதிக்கும் மனிதர்க
ளூன்றெய்வ மாக வுயிர்க்கின்ற பல்லுயிர்
நான்றெய்வ மென்று நமன்வரு வானே. 7

258 திளைக்கும் வினைக்கடற் றீர்வுறு தோணி
யிளைப்பின்றி நீக்கு மிருவழி யுண்டு
கிளைக்குந் தனக்குமக் கேடில் புகழோன்
விளைக்குந் தவமற மேற்றுணை யாமே. 8

259 பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
யற்ற முரையா னறநெறிக் கல்லது
வுற்றுங் களாலொன்று மீந்தது வேதுணை
மற்றண்ணல் வைத்த வழிகொள்ளு மாறே. 9

www.aakikceyogam.com

17. அறஞ்செயான்றிறம்

260 எட்டி பழுத்த விருங்கனி வீழ்ந்தன
வொட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயனறி யாரே. 1

261 ஒழிந்தன காலங்க ளூழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிட ராக்கை
யழிந்தன கண்டு மறமறி யாரே. 2

262 அறமறி யாரண்ணல் பாத நினையுந்
திறமறி யார்சிவ லோக நகர்க்குப்
புறமறி யார்பலர் பொய்ம்மொழி கேட்டு
மறமறி வார்பகை மன்னிநின் றாரே. 3

263 இருமலுஞ் சோகையு மீளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகு
முருமிடி நாகமு ரோணி கழலைத்
தருமஞ்செய் வார்பக்கற் றுழகி லாவே. 4

264 பரவப் படுவான் பரமனை யேத்தா
ரிரவலர்க் கீதலை யாயினு மீயார்
கரகத்தே நீராட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தி னிற்றிரோ நானனெஞ்சி னீரே. 5

265 வழிநடப் பாரின்றி வானோ ருலகங்
கழிநடப் பார்நடந் தார்கரும் பாரு
மழிநடக் கும்வினை மாசற வோட்டிட்
டொழிநடப் பார்வினை யோங்கி நின்றாரே. 6

www.aakikceyogam.com

266 கனிந்தவ ரீசன் கழலடி காண்பர்
துணிந்தவ ரீசன் றுறக்கம தாள்வர்
மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே. 7

267 இன்ப மிடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
வின்ப மதுகண்டு மீகிலாப் பேதைக
ளன்பிலார் சிந்தை யறமறி யாரே. 8

268 கெடுவது மாவதுங் கேடில் புகழோ
னடுவல்ல செய்தின்ப நாட்டவு மொட்டா
னிடுவது மீவது மெண்ணுமி னின்பம்
படுவது செய்யிற் பசுவது வாமே. 9

269 செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராம
லில்லங் கருதி யிறைவனை யேத்துமின்
வில்லி யிலக்கெய்த விற்குறி யாமே. 10

18. அன்புடைமை

270 அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே. 1

271 பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரு மிளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. 2

www.aakikceyogam.com

272 என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினு
மன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்போன் மணியினை யெய்தவொண் ணாதே. 3

273 ஆர்வ முடையவர் காண்ப ரரன்றன்னை
யீரம் முடையவர் காண்ப ரிணையடி
பார முடையவர் காண்பர் பவந்தன்னைக்
கோர நெருக்கொடு கொங்குபுக் காரே. 4

274 என்னன் புருக்கி யிறைவனை யேத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியுந்
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே. 5

275 தானொரு காலஞ் சயம்புவென் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்குந்
தேனொரு பாற்றிகழ் கொன்றை யணிசிவன்
றானொரு வண்ணமெ னன்பினின் றானே. 6

276 முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
யன்படைத் தெம்பெரு மானை யறிகிலார்
வன்படைத் திந்த வகலிட வாழ்வினி
லன்படைத் தான்ற னகலிடத் தானே. 7

277 கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி
யிருத்தியும் வைத்து மிறைவென் றேத்தியு
மருத்தியு ளீசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே. 8

278 நித்தலுந் துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன்
வைத்த பரிசறிந் தேயு மனிதர்க
ளிச்சையு ளேவைப்ப ரெந்தை பிரானென்று
நச்சியே யண்ணலை நாடுகி லாரே. 9

www.aakikceyogam.com

279 அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவ
னன்பினுள் ளாகி யமரும் மரும்பொரு
ளன்பினுள் ளார்க்கே யணைதுணை யாமே. 10

19. அன்பு செய்வாரை யறிவன் சிவன்

280 இகழ்ந்ததும் பெற்றது மீச னறியு
முகந்தருள் செய்திடு முத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே. 1

281 இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்
றுன்பப் பிறவித் தொழில்பல வென்னினும்
வன்பிற் கலவிசெய் தாதிப்பி ரான்வைத்த
முன்பிப் பிறவி முடிவது தானே. 2

282 அன்புறு சிந்தையின் மேலெழு மவ்வொளி
யின்புறு கண்ணியொ டேற விசைந்தன
துன்புறு கண்ணியைந் தாடுந் துடக்கற்று
நண்புறு சிந்தையை நாடுமி னீரே. 3

283 புணர்ச்சியு ளாயிழை மேலன்பு போல
வுணர்ச்சியு ளாங்கே யொடுங்கவல் லாருக்
குணர்ச்சி யில்லாது குலாவி யுலாவி
யணைத்த தணைத்தின்ப மதுவிது வாமே. 4

284 உற்றுநின் றாரொடு மத்தகு சோதியைச்
சித்தர்க ளென்றுந் தெரிந்தறி வாரிலை
பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ
முத்திகொ டுத்தவர் முன்பு நின்றானே. 5

285 கண்டேன் கமழ்தரு கொன்றை யினனடி
கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை
கண்டேன் கமல மலருறை வானடி
கண்டேன் கழலதெ னன்பினுள் யானே. 6

286 நம்பனை நாள விதப்பொரு ளாகுமென்
றும்பரில் வானவ ரோதுந் தலைவனை
யின்பனை யின்பத் திடைநின் றிரதிக்கு
மன்பனை யாரு மறியகி லாரே. 7

287 முன்பு பிறப்பு மிறப்பு மறியாதா
ரன்பி லிறைவனை யாமறி யோமென்ப
ரின்பப் பிறப்பு மிறப்பு மிலாநந்தி
யன்பி லவனை யறியகி லாரே. 8

288 ஈச னறியு மிராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்
தேசுற் றறிந்து செயலற் றிருந்திடி
லீசன்வந் தெம்மிடை யீட்டி நின்றானே. 9

289 விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் றலையாப் பெருமையை
யெட்டுமென் னுருயி ராய்நின்ற வீசனை
மட்டுக் கலப்பது மஞ்சன மாமே. 10

20. கல்வி

290 குறிப்பறிந் தேனுட லுயிரது கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே. 1

www.aakikceyogam.com

291 கற்றறி வாளர் கருதிய காலத்து
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி யுரைசெய்யுங்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே. 2

292 நிற்கின்ற போத நிலையுடை யான்கழற்
கற்கின்ற செய்மின் கழிந்துறும் பாவங்கள்
சொற்குன்ற லின்றித் தொழுமின் றெழுதபின்
மற்றென்றி லாத மணிவிளக் காமே. 3

293 கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றார்
பல்லி யுடையார் பாம்பரிந் துண்கின்றா
ரெல்லியுங் காலையு மேத்து மிறைவனை
வல்லியுள் வாதித்த காயமு மாமே. 4

294 துணையது வாய்வருந் தூயநற் சோதி
துணையது வாய்வருந் தூயநற் சொல்லாந்
துணையது வாய்வருந் தூய்மலர்க் கந்தந்
துணையது வாய்வருந் தூயநற் கல்வியே. 5

295 நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினாற் பண்பின் பயன்கெடுங்
கோலொன்று பற்றினாற் கூடாப் பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின் றார்களே. 6

296 ஆய்ந்துகொள் வார்க்கர னங்கே வெளிப்படுந்
தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடு
மேய்ந்த விளமதி யெட்டவல் லார்கட்கு
வாய்ந்த மனமல்கு நூலேணி யாமே. 7

297 வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்
கழித்துணை யாங்கற்றி லாதவர் சிந்தை
யொழித்துணை யாமும்ப ராமுல கேழும்
வழித்துணை யாம்பெருந் தன்மை வல்லானே. 8

www.aakikceyogam.com

298 பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது வெல்லா முதல்வ னருள்பெறில்
கிற்ற விரகிற் கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்ப முற்றுநின் றரே. 9

299 கடலிடை யான்மலை யானைந்து பூதத்
துடலிடை யான்பல வூழிதொ றூழி
யடல்விடை யேறு மமரர்க ணுக
னிடமுடை யார்நெஞ்சத் தில்லிருந் தானே. 10

21. கேள்வி கேட்டமைதல்

300 அறங்கேட்டு மந்தணர் வாய்மொழி கேட்டு
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் மீசன்
றிறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே. 1

301 தேவர்பி ரான்றனைத் திவ்விய மூர்த்தியை
யாவ ரொருவ ரறிவா ரறிந்தபின்
ஞேதுமின் கேண்மி னுணர்மி னுணர்ந்தபி
ஞேதி யுணர்ந்தவ ரோங்கிநின் றரே. 2

302 மயன்பணி கேட்பது மாநந்தி கேட்பி
னயன்பணி கேட்ப தரன்பணி யாலே
சிவன்பணி கேட்பவர் தேவரு மாவர்
பயன்பணி கேட்பது பற்றது வாமே. 3

303 பெருமா னிவனென்று பேசி யிருக்குந்
திருமானி டர்பின்னைத் தேவரு மாவ
ரருமாத வர்க்கு மகிழ்ந்தருள் செய்யு
மருமாத வத்தெங்க ளாதிப் பிரானே. 4

304 ஈச னருளு மிறப்பும் பிறப்பையும்
பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தி
நேசமு மாகு நிகழொளி யாய்நின்று
வாச மலர்க்கந்த மன்னி நின்றனே. 5

305 விழுப்பங் கெழுமியு மெய்ந்நின்ற ஞானத்
தொழுக்கமுஞ் சிந்தை யுணர்கின்ற போது
வழுக்கி விடாவிடில் வானவர் கோனு
மிழுக்கின்றி யெண்ணிலி காலம தாமே. 6

306 சிறியார் மணற்சோற்றிற் றேக்கிடு மாபோற்
செறிவா லனுபோகஞ் சித்திக்கு மென்னிற்
குறியாத தொன்றைக் குறியாதார் தம்மை
யறியா திருந்தா ரவரவ ரன்றே. 7

307 உறுதுணை யாவ துயிரு முடம்பு
முறுதுணை யாவ துலகுறு கேள்வி
செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்சிற் பிறப்பில்லை தானே. 8

308 புகழநின் றார்க்கும் புராணனெம் மீச
னிகழ நின்றார்க்கு மிடும்பைக் கிடமா
மகிழநின் றதியை யோதி யுணராக்
கழியநின் றார்க்கொரு கற்பசு வாமே. 9

309 வைத்துணர்ந் தான்மனத் தோடும்வாய் பேசி
யொத்துணர்ந் தானுரு வொன்றேடொன் றெவ்வா
தச்சுழன் றணி கலங்கினு மாதியை
நச்சுணர்ந் தார்க்கே நணுகலு மாமே. 10

22. கல்லாமை

310 கல்லா தவருங் கருத்தறி காட்சியை
வல்லா ரெனிலருட் கண்ணன் மதித்துளோர்
கல்லாதா ருண்மைபற் றுநிற்பர் கற்றேருங்
கல்லாதார் பேரின்பங் காணுகி லாரே. 1

311 வல்லார்க ளென்றும் வழியொன்றி வாழ்கின்று
ரல்லாத வர்க ளறிவுப லவென்பா
ரெல்லா விடத்து முளனெங்க டம்மிறை
கல்லாத வர்கள் கலப்பறி யாரே. 2

312 நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்கா
ளெல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணுதே. 3

313 கில்லேன் வினைத்துய ராக்கு மயலானேன்
கல்லே னரனெறி யறியாத் தகைமையின்
வல்லேன் வழங்கும் பொருளே மனத்தினுட்
கல்லேன் கழியநின் றடவல் லேனே. 4

314 நில்லாது சீவ னிலையன் றெனவெண்ணி
வல்லா ரறத்துந் தவத்துளு மாயினர்
கல்லா மனிதர் கயவ ருலகினிற்
பொல்லா வினைத்துயர் போகஞ்செய் வாரே. 5

315 விண்ணினி னுள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினி னுள்ளே கலந்தங் கிருந்தது
மண்ணினி னுள்ளே மதித்து மதித்துநின்
றெண்ணி யெழுதி யிளைத்துவிட் டாரே. 6

www.aakikceyogam.com

316 கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்குங்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே. 7

317 கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராங்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. 8

318 கற்றுஞ் சிவஞான மில்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கண்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்றன்பி னிற்போர் கணக்கறிந் தார்களே. 9

319 ஆதிப்பி ரானம ரர்க்கும் பரஞ்சுடர்
சோதி யடியார்த் துடரும் பெருந்தெய்வ
மோதி யுணரவல் லோமென்ப ருண்ணின்ற
சோதி நடத்துந் துடர்வறி யாரே. 10

23. நடுவு நிலைமை

320 நடுவுநின் றார்க்கன்றி ஞானமு மில்லை
நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானுநின் றேனே. 1

321 நடுவுநின் றானல்ல கார்முகில் வண்ண
னடுவுநின் றானல்ல நான்மறை யோதி
நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவோர்
நடுவுநின் றார்நல்ல நம்பனு மாமே. 2

www.aakikceyogam.com

322 நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றாரொடு நானுநின் றேனே. 3

323 தோன்றிய வெல்லாந் துடைப்ப னவனன்றி
ஏன்றுநின் றாரென்று மீச னிணையடி
மூன்றுநின் றார்முதல் வன்றிரு நாமத்தை
நான்றுநின் றார்நடு வாகிநின் றாரே. 4

24. கள்ளுண்ணாமை

324 கழுநீர்ப் பசுப்பெறிற் கயந்தொறுந் தேராக்
கழுநீர்வி டாய்த்துத்தங் காயஞ் சுருக்கு
முழுநீர்கள் ளுண்போர் முறைமை யகன்றோர்
செழுநீர்ச் சிவன்றன் சிவானந்தத் தேறலே. 1

325 சித்த முருக்கிச் சிவமாஞ் சமாதியி
லொத்துச் சிவானந்த மோவாத தேறலைச்
சுத்த மதுவுண்ணச் சுவானந்தம் விட்டிடா
நித்த லிருத்தல் கிடத்தல் கீழ்க்காலே. 2

326 காமமுங் கள்ளுங் கலதிகட் கேயாகு
மாமல முஞ்சம யத்துள் மயலுறும்
போமதி யாகும் புனித னிணையடி
போமய வானந்தத் தேற லுணர்வுண்டே. 3

327 வாமத்தோர் தாமு மதுவுண்டு மாள்பவர்
காமத்தோர் காமக்கள் ளுண்டே கலங்குவ
ரோமத்தோ ருள்ளொளிக் குள்ளே யுணர்வர்கண்
ணுமத்தோ ரன்றே நணுகுவர் தாமே. 4

www.aakikceyogam.com

328 உள்ளுண்மை யோரா ருணரார் பசுபாசம்
வள்ளன்மை நாத னருளினின் வாழ்வுறா்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகஞ் சேர்வுறா்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே. 5

329 மயக்குஞ் சமய மலமன்னு மூடர்
மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார்
மயக்குறு மாயையின் மாமாயை வீடு
மயக்கிற் றெளியின் மயக்குறு மன்றே. 6

330 மயங்குந் தியங்குங்கள் வாய்மை யழிக்கு
மியங்கு மடவார்தம் மின்பமே யெய்தி
முயங்கு நயங்கொண்ட ஞானத்து முந்தா
ரியங்கு மிடையறு வானந்த மெய்துமே. 7

331 இராப்பக லற்ற விடத்தே யிருந்து
பராக்கற வானந்தத் தேறல் பருகா
ரிராப்பக லற்ற விறையடி யின்பத்
திராப்பகன் மாயை யிரண்டிடத் தேனே. 8

332 சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி யழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானந் தன்னிற் றலைப்பட்டுச்
சத்திய ஞானவா னந்தத்திற் சார்தலே. 9

333 சத்தன ருடரிற் சத்தி யருளுண்டாஞ்
சத்திய ருடரிற் சத்த னருளுண்டாஞ்
சத்தி சிவமா மிரண்டுந்தன் னுள்வைக்கச்
சத்தியு மெண்சித்தித் தன்மையு மாமே. 10

334 தத்துவ நீக்கி மருணீக்கித் தானாகிப்
பொய்த்தவ நீக்கிமெய்ப் போகத்துட் போக்கியே
மெய்த்த சகமுண்டு விட்டுப் பரானந்தச்
சித்திய தாக்குஞ் சிவானந்தத் தேறலே. 11

www.aakikceyogam.com

335 யோகிகள் கால்கட்டி யொண்மதி யானந்தப்
போத வமுதைப் பொசித்தவ ரொண்சித்தி
மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்
றுறு மதத்தா லறிவழிந் தாரே. 12

336 உண்ணீ ரமுத முறுமூற லைத்திறந்
தெண்ணீர் குரவ னிணையடித் தாமரை
நண்ணீர் சமாதியி னாடி னிரானலங்
கண்ணுறொ டேசென்று கால்வழி காணுமே. 13

www.aakikceyogam.com